1971 டிசம்பர் 11]

மத்திய கூட்டுறவு பண்டகசாலைகள்.

* 279 வினு—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

இம்மாநிலத்திலுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு பண்டகசாலைகள் ஒவ்வொன்றின் டைரக்டர் போர்டிலும் அரசிஞல் நியமனம் செய்யப்பட்ட டைரக்டர்கள் எத்தனை பேர்கள் உள்ளனர்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இப்படி நியமனம் செய்யப் படுவதற்கு ஏதேனும் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவா? அப்படியாஞல் அவை யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் ஊக்கம் உள்ளவர்கள் நியமிக்கப்படுகிறுர்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் எல்லோருக்கும் ஊக்கம் இருக்கிறது. ஆஞல் அதற்கென தனித் திறமை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, தனித் திறமை என்று சட்டம் ஒன்றும் வகுக்கப்படவில்லை. நேர்மையாகவும், நாணயமாகவும் நடந்துகொள்வார்களா, என்று பார்த்து, நியமனம் செய்யப்படுகிறுர்கள்.

திரு. எம். முதலையா: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் டைரக்டர்களைப் போடும்போது கட்சி ரீதியில் நியமிக்கப் போவதாக வதந்தி இருக்கிறதே, அது உண்மையா? அப்படி கட்சி ரீதியில்தான் நியமிக்கப் போகிறீர்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, கட்சி ரீதியில் நியமனங்கள் செய்யப்படுவதில்லை. 27-வது செக்ஷன் என்று ஒரு விதி இருக்கின்றது. அதன்படி தகுதிகள் இருக்க வேண்டும்.

சேதுபாவா சத்திரத்திற்கு நிலவள வங்கி.

* 280 வினு—திரு. குழ. செல்லையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேதுபாவாசத்திரம் வட்டாரத்துக்கு ஒரு சிலவள வங்கி அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம். எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) & (இ) தலைவர் அவர்களே, சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் நிலவள வங்கி ஒன்றை, பட்டுக்கோட்டை நிலவள வங்கியின் கிளையாக திறக்க, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அது விரைவில் திறக்கப்படும்.

@ 174-175-ம் பக்கங்களில் மூன்ரும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.